## உசிலம்பட்டி நகராட்சி
## நகர்மன்ற சாதாரண கூட்டம்   நாள்: 29.01.2025 புதன் கிழமை
## நேரம் பிற்பகல் 3.00 மணி

---

**மன்றப்பொருள்– 1**

உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 சட்டபிரிவு 57/7–இன் படி அவசர அவசியம் கருதி வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்க்கண்ட பணிகள் பார்க்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | வார்டு எண் 18,19,20,23 மற்றும் 24 பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய்களில் மண் கழிவுகள் ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றுதல் பணி | ரூ.2.20/– இலட்சம் |
| 2 | வடகிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் | ரூ.3.00 /– இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு**

1..மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். 1886/2023/இ1

தீர்மான எண் 764

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–2**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் அறிவுரையின்படி உசிலம்பட்டி நகராட்சி சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் நிலுவை இல்லாமல் வசூலிக்க தினசரி குறியீட்டு நிர்ணயம் செய்து 100 சதவிகிதம் அடையவும் வசூல் பணி துரிதப்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் 2024–25–ஆம் ஆண்டிற்கு ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி விளம்பரம் செய்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.3.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.கஎண் 1775/2021/அ1)

தீர்மான எண் 765

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–3**

தற்சமயம் வடகிழக்கு பருவமழை உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகள் உள்ளதால் இவ்வலுவலக தூய்மை பணியாளர்களுக்கு தேவையான , மழை அங்கி, கையுறை, ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் கையுறைகள், ஆகியவைகள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**
அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.கஎண் 567/2020/எச்1 )
தீர்மான எண் 766
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**<u>மன்றப்பொருள்-4</u>**

இவ்வலுவலக தூய்மை பணியாளர்களுக்கு, மழை அங்கி, ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் கையுறைகள் மற்றும் மறு உபயோகம் செய்யப்படும் கையுறை ஆகியவைகள் விநியோகம் செய்ய கீழ்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்கள் | தொகை.ரூ ( ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | SREE THAI MOOKAMBIKA EXPORT COIMBATORE. | 1.முழு மழை அங்கி. | ரூ.2832/- |
| | | 2.மறுஉபயோகம் செய்யப்படும் கையுறை | ரூ.171.10/- |
| | | 3.ஒருமுறை பயன்படுத்தும் கையுறை | ரூ.1792/- |
| | | 4.கால் சட்டையுடன் கூடிய மழை அங்கி | ரூ.3540/- |
| 2. | SRI BALAJI MARKETING DINDIGUL. | 1.முழு மழை அங்கி. | ரூ.3068/- |
| | | 2.மறுஉபயோகம் செய்யப்படும் கையுறை | ரூ.194.70/- |
| | | 3.ஒருமுறை பயன்படுத்தும் கையுறை | ரூ.1904/- |
| | | 4.கால் சட்டையுடன் கூடிய மழை அங்கி | ரூ.3776/- |

மேற்காணும் விபரத்தின் படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள SREE THAI MOOKAMBIKA EXPORT COIMBATORE, நிறுவனத்தின் விலை விகிதத்தை அனுமதிக்க மன்றத்ததின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**
மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.கஎண் 567/2020/எச்1 )
தீர்மான எண் 767
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்-5**

இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநராக பணிபுரியும் திரு.எஸ்.ஜெயராஜ் பாண்டி, என்பவரது ஒப்பந்த காலம் 22.01.2025 உடன் முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீட்டிப்பது தொடர்பாக டெஸ்கோ மதுரை நிறுவன கடிதஎண்.8145/2025-2026 நாள்.12.12.2024-இல் கீழ்கண்ட சம்பளத்தொகைக்கு கோரப்பட்டுள்ளது.

Driver 1 No Salary Rs.27498.00
Service Charger + 8 %
Gst + 18%

எனவே மேற்படி தொகைக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு புதுப்பிக்கவும், அதற்காகும் உத்தேச செலவினத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.254/2017/சி1)
தீர்மான எண் 768
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்-6**

இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரிந்த திரு.வே.சுருளிச்சாமி என்பவர் பரமக்குடி நகராட்சிக்கு பணிமாறுதல் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ( (MD) NO.2540 of 2024 ) நீதிமன்றம் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. வழக்கறிஞர் திரு.அ.கண்ணன் என்பவர் மேற்படி வழக்கிற்கு நீதிமன்றத்தில் நகராட்சி சார்பாக ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்தமைக்குறிய கட்டணமாக ரூ.15,000/- ஐ வழங்க கோரியுள்ளார், மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1845/2024/சி1)
தீர்மான எண் 769
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்-7**

SUIDF 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ150.60இலட்சம் மதிப்பீட்டில் 1430 எண்ணம் தெரு மின் விளக்குகளை ஆற்றல் மிகு LED தெரு மின் விளக்குகளாக மாற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட விரிவாக்க பகுதிகளில் தெரு மின் விளக்குகள் தேவைப்படவதால் மேற்படி திட்டத்தின் சேமிப்பு கணக்கில் கூடுதலாக 20 வாட்ஸ் LED தெரு மின் விளக்குகள் கொள்முதல் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க எண் 2037/2023/இ1)

தீர்மான எண் 770
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–8</u>

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–2025–இன் கீழ் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்திற்கு சுற்று சுவர் அமைத்தல் பணி மேற்கொள்ள 04.12.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25</u> அரசு மேலநிலைப்பள்ளி மைதானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | ரூ.10.00/– | M/s சுஜி இன்பரா, | 1.57% அதிகம் |
| | | | திரு.ஈஸ்வரன், | 0.25% குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 1837/2024/இ1
தீர்மான எண் 771
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–9</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 9292/2022/SBM 1 நாள் 17.11.2023–இல் தூய்மை இந்தியா திட்டம் (நகர்) 2.0 , திரவ கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரிப்பு செய்ய இந்நகராட்சியில் புதிதாக 4.7 MLD, 10 KLD அளவுள்ள STP cum FSTP அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய விலை விகிதம் கோரப்பட்டதில் குறைந்த விலை விகிதம் வழங்கிய M/s Ayothy Consultancy நிறுவனம் மூலம் தயார் செய்யவும், அதற்காகும் செலவினம் மதிப்பீட்டு தொகையில் 1.5% மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1580 /2023/இ1)
தீர்மான எண் 772
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

மன்றப்பொருள்–10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சிறு பாலங்கள் அமைக்க கீழ்க்கண்ட விபரப்படி பணி மேற்கொள்ள 09.01.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 7 வைரவன் கோவில் தெருவில் இரண்டு எண்ணம் சிறுபாலங்கள் அமைக்கவும் , வார்டு எண் 11 கருப்பு கோவில் தெருவில் ஒரு எண்ணம் சிறுபாலம் அமைக்கவும் மற்றும் வார்டு எண் 12 நகராட்சி அலுவலகம் அருகில் டி இ ஓ அலவலகத்திற்கு செல்லும் வழியில் ஒரு எண்ணம் சிறுபாலம் அமைக்கும் பணிகள் | ரூ.2.00/– | M/s சுஜி இன்பரா, | 0.09% குறைவு |
| | | | M/s சீதா ராமதாசன் அண்ட் கோ | 1.57% அதிகம் |
| 2 | வார்டு எண் 15 கருக்கட்டான் பட்டி மெயின் சாலையில் இரண்டு எண்ணம் சிறு பாலங்கள் அமைக்கும் பணி, வார்டு எண் 12 முத்து ஐஸ் கம்பெனி தெரு, மற்றும் முஸ்லீம் தெரு ஆகிய இடங்களில் மூன்று எண்ணம் சிறுபாலங்கள் மழைநீர் வடிகாலுடன் அமைக்கவும், மற்றும் வார்டு எண் 16 மீனாட்சி காம்பவுண்ட், குப்பான் செட்டியார் மில் தெரு, ஜே பி ஆர் மகால் தெரு, கருக்கட்டான்பட்டி மெயின் சாலை நுழைவு வாயில் ஆகிய இடங்களில் நான்கு எண்ணம் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலங்கள் அமைக்கும் பணி | ரூ.9.00/– | M/s சுஜி இன்பரா, | 1.24% அதிகம் |
| | | | M/s கே.பி.கே கன்ஸ்ட்ரக்சன் | 0.13% குறைவு |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1569, 1570/2024/இ1)

தீர்மான எண் 773

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–11</u>

நகர் பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளில் மட்கும் குப்பைகளை நுண்உரச்செயலாக்க மையத்தில் உரமாக மாற்ற சேகரிக்கப்படுகிறது. மட்கா குப்பைகளை மறுசுழற்சி பொருட்கள் மீட்பு மையத்தில் (Baling press Machine) மூலம் அழுத்தப்பட்டு கட்டுகளாக கட்டப்பட்டு சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தற்சமயம் மேற்கண்ட இயந்திரம் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்கண்ட இயந்திரத்தை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 056 /2025/எச்1)
தீர்மான எண் 774
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–12</u>

இந்நகராட்சி எல்லைக்கட்பட்ட பகுதிகளில் பயனாளிகள் பயன்படுத்தும் திடக்கழிவுகளில் மட்கும் குப்பை மற்றும் மட்கா குப்பைகளை தரம் பிரித்து வழங்கவும் மேலும் பிளாஸ்டிக் மற்றும் நெகிழி பொருட்களால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து ஆட்டோ மூலம் ஒழிபெருக்கி வைத்து 17 நாட்களுக்கு விளம்பரம் செய்தமைக்கு ஆன செவலவினம் ரூ.25500–/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.055/2025/எச்1)
தீர்மான எண் 775
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–13</u>

இந்நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களல் (D.B.C) டெங்கு கொசு ஒழிப்பு பணி தேவதர்ஷின் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு காலம் 31.12.2024 உடன் முடிவடைந்துள்ளது. அவசர அசியம் கருதி மேற்கண்ட பணியினை அரசின் அங்கீகாரம் பெற்ற மகளிர் சுய உதவிக்குழு மூலம் 01.01.2025 முதல் ஆறு மாதங்களுக்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.054 /2025/எச்1)
**தீர்மான எண் 776**
**தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்–14**

இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகள் ( மட்கும் மற்றும் மட்கா ) M.C.C அருகே அமைந்துள்ள நவீன மின்மயானம் அருகில் கொட்டப்பட்டு வருகிறது. மேற்கண்ட கழிவுகளை சேகரிக்க போதிய இடம் இல்லாத காரணத்தால் Hittachi மற்றும் J.C.B. மூலம் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணி மாதம் இரு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.057 /2025/எச்1)
**தீர்மான எண் 777**
**தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**மன்றப்பொருள்–15**

தூய்மை இந்திய இயக்கம் SBM (U) 2.0 திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி நகராட்சிக்கு 6KL கொள்ளளவு கொண்ட கழிவுநீர் டேங்கர் (Cesspool Tanker) ஒன்று வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 9192/2022/SBM–1 நாள்:21.08.2023ன்படி அனுமதிக்கப்பட்டு, ஒரு(1) வாகனம் வாங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வரையிலான வார்டு பகுதிகளிலுள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், அரசு அலுவலகங்களில் கழிவுநீர் தொட்டியில் சேகரித்து வைத்துள்ள கழிவு நீரினை, மனித கழிவுகளை மனிதனே அகற்றுவதற்கு தடை மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013 மற்றும் அரசாணை எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.02.01.2023–ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலில் மனித சக்திகளை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் நோய் தொற்றுகளை தவிர்த்திடும் பொருட்டு இயந்திரங்கள் மூலம் கழிவு நீரினை அகற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆகையால், இந்நகராட்சி பகுதிகளில் கழிவுநீர் தொட்டியில் சேகரித்து வைத்துள்ள கழிவு நீரினை நகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் டேங்கரை (Cesspool Tanker) பொது மக்கள் பயன்படுத்திடும் வகையில், இந்த வாகனத்திற்கான அனைத்து செலவினங்களையும் உட்படுத்தி பயனீட்டாளர் கட்டணம் வசூல் செய்வதற்கு கட்டணங்கள் நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது.

| வ. எண் | விபரம் | பயனீட்டாளர் கட்டணம் |
|---|---|---|
| 1, | குடியிருப்பு – 1 லிட்டர் முதல் 6000 லிட்டர் வரை (நடை ஒன்றுக்கு) | ரூ. 3000/– வரை கட்டணம் நிர்ணயம் செய்யலாம். |
| 2, | வணிக நிறுவனங்கள்– 1 லிட்டர் முதல் 6000 லிட்டர் வரை (நடை ஒன்றுக்கு) | ரூ. 4000/– வரை கட்டணம் நிர்ணயம் செய்யலாம். |

மேற்காணும் விபரப்படி, கழிவு நீர் டேங்கர் (Cesspool Tanker) பயனீட்டாளர் கட்டணம் வசூல் செய்வதற்குரிய கட்டணம் நிர்ணயம் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.இந்நகராட்சி கழிவுநீர் டேங்கரை (Cesspool Tanker) பொது மக்கள் பயன்பட்டிற்கு கொண்டு வர மன்றம் அனுமதிக்கலாம்.

2.இந்நகராட்சி கழிவுநீர் டேங்கருக்கு (Cesspool Tanker) பயனீட்டாளர் கட்டணம் வசூல் செய்வதற்கு கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

3.தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.053/2025/எச்1)

தீர்மான எண் 778

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 8 சிவன் காளைத் தேவர் தெரு மற்றும் காளியம்மன் கோவில் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து சுகாதார சீர் கேடு ஏற்படுகிறது. எனவே மேற்படி தெருக்களில் பழைய வாறுகால்களை உடைத்து அப்புறபடுத்தி புதிதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கவும் மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 67/2025/இ1

தீர்மான எண் 779

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–17**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 22 பேரையூர் சாலையில் அமைந்துள்ள நுண் உர மையத்தின் (MCC ) கிழக்குப் பகுதியில் சுற்று சுவர் இல்லாத காரணத்தினால் வெளியாட்கள் உள் நுழைவதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுகிறது. எனவே வெளியாட்கள் எவரும் உள் நுழையா வண்ணம் தடுக்கும் பொருட்டு சுற்று சுவர் அமைக்க மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 68/ 2025/இ1

தீர்மான எண் 780

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 21 பி.எம்.டி நகர் தெரு மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் புதிதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 69/ 2025/இ1
தீர்மான எண் 781
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–19**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 உழவர் சந்தை அருகில் உள்ள முழு நேர நூலக இணைப்பு கட்டிடத்தில் வாசகர்களுக்கு பயன்படும் வகையில் கழிப்பறை அமைத்து தண்ணீர் வசதிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 70/2025/இ1
தீர்மான எண் 782
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–20**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 14–இல் கருக்கட்டான் பட்டி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் தட்டோடு பதித்தல், தரை தளம், சுவற்றில் டைல்ஸ் பதித்தல், Ventilator மற்றும் Hand Rail போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.6.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 73/2025/இ1
தீர்மான எண் 783
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**மன்றப்பொருள்–21**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 20 திருவள்ளுவர் நகர் மர மில் தெரு, டி.இ.எல்.சி எதிர்புறம், SDA பள்ளி தெரு பகுதிகளில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் கழிவு நீர் தேக்கமடைந்து கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர் கேடு ஏற்படுகிறது. மேற்படி சேதமடைந்த மழைநீர் வடிகால்களை மறு சீரமைக்கவும், உடைந்த சிறு பாலத்தை அப்புறபடுத்தி புதிதாக சிறுபாலம் அமைக்கவும் மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 75/ 2025/இ1
தீர்மான எண் 784
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–22</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 மாமரத்துப்பட்டி பகுதியில் உள்ள நாடக மேடை மற்றும் வார்டு எண் 15 கருக்கட்டான் பட்டி மெயின் சாலையில் உள்ள நாடக மேடை பழுதடைந்துள்ளதால் மேற்படி நாடக மேடைகளை மராமத்து பணி மேற்கொள்ள மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 71/ 2025/இ1

தீர்மான எண் 785

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–23</u>

இந்நகராட்சி அலுவலக பணிக்கு பயன்படுத்தப்படும் HP laser jet MFP M436 பிரிண்டர்களுக்கான Toner Cartridge (model 57A) தற்பொழுது இருப்பில் இல்லாத கரணத்தினால் அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி புதிதாக 16 எண்ணம் Toner Cartridge (model 57A) கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 74/ 2025/இ1

தீர்மான எண் 786

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–24</u>

இந்நகராட்சி வரி வசூல் மையத்தில் உள்ள கணினி மேசைகள் மற்றும் நாற்காலிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி வரி வசூல் மையத்திற்கு புதிதாக 4 எண்ணம் கணினி மேசைகள் மற்றும் 5 எண்ணம் கணினி நாற்காலிகள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.75000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 74/ 2025/இ1

தீர்மான எண் 787

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–25</u>

இந்நகராட்சி அலுவலக பணிக்கு பயன்படுத்தப்படும் கணினிகளில் சிரான பயன்பாட்டிற்கு கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்டுவதால் கணினி பணியின் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. DMP 80col Cartridge – 24 Nos
2. Key board/ Mouse – 12 Nos
3. Mouse pads – 24 Nos
4. LAN Cables (5 Meter) – 6 Nos
5. LAN Cables (3 Meter) – 6 Nos
6. LAn Switches 8 Part – 2 Nos

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 74/ 2025/இ1
தீர்மான எண் 788
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–26</u>

இந்நகராட்சி அலுவலக பணிக்கு கணினி பணியின் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. Desk Tops – 24 Nos
2. Laser Printers – 3 Nos
3. Lap Tops – 3 Nos

<u>அலுவலகக்குறிப்பு</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 74/ 2025/இ1
தீர்மான எண் 789
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–27</u>

15வது மத்திய நிதிக்குழு ஆணைய திட்டம் 2021–22–இன் கீழ் 100 எண்ணம் தெருமின் விளக்குகள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தெருமின் விளக்குகளுக்கான Switch Box–இல் மீட்டர் பொருத்த வேண்டியுள்ளதால் கீழ்க்கண்ட இடங்களில் மீட்டர் பொருத்த வைப்புத்தொகை ரூ. 65030/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|
| 1 | 3 | வடகாட்டுப்பட்டி மெயின் ரோடு |
| 2 | 3 | வடகாட்டுப்பட்டி |
| 3 | 20 | TRMS காம்பவுண்ட் பின்புறம் –I |
| 4 | 20 | வெள்ளைசாமி காம்பவுண்ட் பின்புறம்– II |
| 5 | 20 | வெள்ளைசாமி காம்பவுண்ட் பின்புறம்– III |
| 6 | 21 | மர அறுவை மில் தெரு |
| 7 | 21 | சின்னமாயன் வாத்தியார் தெரு |

| | | |
|---|---|---|
| 8 | 21 | வில்லாணி சாலை |
| 9 | 21 | வில்லாணி சாலை |
| 10 | 22 | கோவை பேக்கரி பின்புறம் |
| 11 | 22 | மகாலிங்கம் லேத் தெரு |
| 12 | 22 | பழைய மண்ணெண்ணெய் குடோன் தெரு–I |
| 13 | 22 | பழைய மண்ணெண்ணெய் குடோன் தெரு–II |
| 14 | 15 | கருக்கட்டான் பட்டி Additional Load |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2089/2022/ இ1

தீர்மான எண் 790

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–28</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 23 கவணம்பட்டி மந்தை அருகில் மற்றும் கவணம்பட்டி மெயின் சாலை ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் கழிவு நீர் தேக்கமடைந்து கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார சீர் கேடு ஏற்படுகிறது. மேற்படி சேதமடைந்த மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறு பாலத்தை அப்புறபடுத்தி புதிதாக சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கவும் மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 72/ 2025/இ1

தீர்மான எண் 791

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள்–29</u>

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0– இன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்துள்ள சமுதாய கழிப்பிடங்களை மறு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள கருகாட்டன்பட்டி (கண்மாய் அருகில்), கருகாட்டன்பட்டி (மாரியம்மன் கோவில் அருகில்) மற்றும் மாமரத்துப்பட்டியில் உள்ள சமுதாயக் கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு | Rs.24.00/– | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 1.68% அதிகம் |
| | | | M/s சுஜி இன்பரா ஒப்பந்ததாரர் | 0,21% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | உசிலம்பட்டி நகராட்சியில் வடகாட்டுப்பட்டி, கவுண்டன்பட்டி (மயானம்) மற்றும் அருணாசலம்பட்டியில் உள்ள சமுதாயக் கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு | Rs.23.50 /- | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 1.09% அதிகம் |
| | | | M/s சுஜி இன்பரா ஒப்பந்ததாரர் | 0.22% குறைவு |
| 3 | உசிலம்பட்டி நகராட்சியில் கவுண்டன்பட்டி மெயின் ரோடு மற்றும் பட்டரை தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பறை பழுது மற்றும் பராமரிப்பு | Rs.18.50/- | திரு.ஈஸ்வரன், ஒப்பந்ததாரர் | 1.83% அதிகம் |
| | | | M/s சுஜி இன்பரா ஒப்பந்ததாரர் | 0.25% குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1..மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண். 687/2024/இ1

தீர்மான எண் 792

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள் -30</u>

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். A.S.(MD) No. 49 of 2014-இல் 03.03.2023-இல் தீர்ப்புரையில் 119/82 கடைக்கு ரூ.95000/- நஷ்ட ஈடாக நகராட்சி நிர்வாகம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. வட்டாட்சியர், உசிலம்பட்டி அவர்களின் கடிதத்தில் ரூ. 49430/- அரசு கணக்கில் செலுத்தி அதன் ரசீதினை இவ்வலுவலகத்திற்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் நீதிமன்ற கட்டணத்தொகை ரூ. 49430/-ஐ அரசு கணக்கில் செலுத்தும் விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 812/2023/அ1)

தீர்மான எண் 793

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள் -31</u>

உசிலம்பட்டி நகராட்சிக்குத் தேவையான அலுவலக உபயோகத்திற்கு 2024 - 25 ம் ஆண்டிற்கான தேவையான எழுது பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அலுவலக அவசர அவசியத்தை முன்னிட்டு Cash ரசீது புக், A4 sheet , பிறப்பு இறப்பு Forms, ரிஜிஸ்டர், ரப்பர் பேண்ட், Tag (டேக்) ஆகிய பொருட்கள் கொள்முதல் செய்ய தி. கோவில்பட்டி பிரிண்டர்ஸ், கோ-ஆப் சொசைட்டி லிட், கோவில்பட்டி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.2,37,573/- மட்டும் தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்ற அனுமதிக்கு

2) மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கு. மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 957 / 2024/ இ2)

தீர்மான எண் 794

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

<u>மன்றப்பொருள் –32</u>

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்வதற்குத் தேவையான கீழ்க்கண்ட கிருமிநாசினி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்ள்ள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு.

| | நிறுவனத்தின் பெயர் | பொருட்கள் | தொகை ரூ (கிலோ ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| | SVR Traders, Madurai | 1) சுண்ணாம்புத் தூள் – 1 கிலோ (GST 5% உள்பட) 2) பிளீச்சிங் பவுடர் 33 % குளோரின் கலந்தவை 1 கிலோ GST 18% உள்பட) | :ரூ.9.00<br>ரூ.40.00 |
| | GV Agencies, Madurai | 1) சுண்ணாம்புத் தூள் – 1 கிலோ (GST 5% உள்பட) 2) பிளீச்சிங் பவுடர் 33 % குளோரின் கலந்தவை 1 கிலோ GST 18% உள்பட) | :ரூ.9.75<br>ரூ.42.00 |
| | Sri Sivan & Co, Madurai | 1) சுண்ணாம்புத் தூள் – 1 கிலோ (GST 5% உள்பட) 2) பிளீச்சிங் பவுடர் 33 % குளோரின் கலந்தவை 1 கிலோ GST 18% உள்பட) | :ரூ.10.50<br>ரூ.45.00 |

மேற்காணும் விபரத்தின்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள SVR Traders, Madurai நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 280 / 2022/ எச் 1)

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண் 795

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

நகர்மன்றத் தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி

**உசிலம்பட்டி நகராட்சி**
**நகர்மன்ற அவசர கூட்டம் நாள்: 29.01.2025 புதன் கிழமை**
**நேரம் பிற்பகல் 3.30 மணி**

**மன்றப்பொருள் –1**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தற்காலிக பேருந்து நிலையம் அமைந்துள்ள இடத்தில் கழிப்பறை வசதி மற்றும் Time Keeper Room பணி மேற்கொள்ள 28.01.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | தற்காலிக பேருந்து நிலையத்தில் Time Keeper Room அமைத்தல் பணி | 6.00 | M/s சுஜி இன்பரா, | 1.72% அதிகம் |
| | | | திரு.ஈஸ்வரன் | 0.04% குறைவு |
| 2 | தற்காலிக பேருந்து நிலையத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை மற்றும் யூரினல் அமைத்தல் பணிகள் | 5.00 | M/s சுஜி இன்பரா, | 1.08% அதிகம் |
| | | | திரு.ஈஸ்வரன் | 0.04% குறைவு |

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1613/2023/இ1
தீர்மான எண் 796
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

நகர்மன்றத் தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி

**<u>உசிலம்பட்டி நகராட்சி</u>**
**<u>நகர்மன்ற அவசர கூட்டம் நாள்: 29.01.2025 புதன் கிழமை</u>**
**<u>நேரம் பிற்பகல் 3.30 மணி</u>**

பாரதிய பார்வர்ட் பிளாக் கட்சி நிறுவன தலைவர் அவர்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மற்றும் பி.கே.முக்கையாத் தேவர் அவர்களின் சிலை அமைந்துள்ள வளாகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் வெண்கல சிலை அமைக்குமாறு கோரி நகர்மன்றத்தில் விண்ணப்பம் அளித்துள்ளதை ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி இடத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் சிலை அமைக்க அரசினை கோர நகர்மன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மான எண் 797
தீர்மானம் : பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மற்றும் பிகே.மூக்கையாத் தேவர் அவர்களின் சிலை அமைந்துள்ள வளாகத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் வெண்கல சிலை அமைக்க நகர்மன்ற உறுப்பினர்காளல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகர்மன்றத் தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி